KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.55

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

எட்டுத்தொகை அகப்பாடல்களில் ‘அணங்கு’ வழிபாடு

ETTUTHOKAI AGAPPAADALGALIL ‘ANANGU’ VAZHIPAADU

R. RENGARAJ[1,*], Dr. M. ARUNACHALAM[2]

[1] PhD Research Scholar (Full Time), (Reg. No. BDU 2410632780927) Department of Tamil Studies, Thanthai Periyar Government Arts and Science College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-23, Tamil Nadu, India.

[2] Research Advisor, Principal, Government Arts and Science College, Perambalur, Tamil Nadu, India.

***Corresponding author:** R. RENGARAJ, rengaraj379@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 24 October 2026
Revised: 26 October 2026
Accepted: 10 November 2026

Article ID
KIJTS-2026-0039

Peer review
Double-blind peer review

Keywords
Worship
Spirit
Religion
Woman
Deity
Mountains
Waterfront
Ghost
Demon.

ABSTRACT

Anangu worship is considered one of the primitive religious practices of ancient Tamil culture. It may also be regarded as Spirit worship. Tylor's theory of Animism is applicable to the concept of Anangu worship found in Sangam poem. Tholkappiyar refers to Anangu in the ontext of fear:

“Anange vilange kalvar tamirai ena
pinankal sala accam nanke” (Tholkappiyam, Porulathikaram, Meyppattiyal – Sutra 252.)

Through this verse, Tholkappiyar identifies Anangu as one of the elements associated with fear. Anangu worship was an important from of ancient religious practice among the early Tamils. This article is about such a ritual.

How to cite this article: R. RENGARAJ, & Dr. M. ARUNACHALAM (2026). எட்டுத்தொகை அகப்பாடல்களில் ‘அணங்கு’ வழிபாடு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 652. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.55
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

இரா. ரெங்கராஜ்

முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், (Reg. No. BDU 2410632780927) தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த), திருச்சிராப்பள்ளி-23, தமிழ்நாடு, இந்தியா.

e-mail : rengaraj379@gmail.com, அலைபேசி : 77083 56370

முனைவர் மு. அருணாசலம்

ஆய்வு நெறியாளர், முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குரும்பலூர், பெரம்பலூர் மாவட்டம்-621 107, செல்: 98944 40530

ஆய்வுச் சுருக்கம்

அணங்கு வழிபாடு சங்கத் தமிழ்ப் பண்பாட்டின் ஆதி சமயமாகும். இதனை ஆவி வழிபாடாகவும் கொள்ளலாம். டைலரின் ஆவி வழிபாட்டுக் கோட்பாடுகள் சங்கப் பாடல்களின் அணங்கு வழிபாட்டிற்குப் பொருந்தி வருகின்றன. தொல்காப்பியர் அணங்கு குறித்து,

‘அணங்கே விலங்கே கள்வர் தம் இறை எனப்

பிணங்கல் சாலா அச்சம் நான்கே’[1](தொல். பொருள். மெய் 252)

என்று அச்சம் தரும் பொருளில் அணங்கினைச் சேர்த்திடுகின்றார். பழந்தமிழரின் தொல் சமய வழிபாடாக இருப்பது அணங்கு வழிபாடேயாகும். இத்தகைய ‘அணங்கு’ வழிபாடு பற்றி இக்கட்டுரை பதிவு செய்கின்றது.

திறவுச் சொற்கள்

வழிபாடு, அணங்கு, சமயம், பெண், முலை மேல் தோன்றும் தெய்வம், மலைகள், நீர்த்துறை, அணங்கு, பேய், சூர்.

ஆய்வு நோக்கம்

பழங்காலத்தில் நாகரிக வாழ்வு தோன்றியதற்கு முன்னர் மக்கள் குழுவினராக இயற்கையைச் சார்ந்து வாழ்ந்த காலத்திலேயே வழிபாடுகள் தோன்றி விட்டன. இயற்கையின் பெருங்கருணையையும், பேராற்றலையும் கண்ட பின்னர் இயற்கை வழிபாடு தோன்றியது. சங்க காலத்திற்கு முன்னர் வழக்கிலிருந்த வழிபாடு சங்க காலத்திலும் காணப்பட்டது. இருப்பினும் பன்முகப்பட்ட வழிபாட்டு நெறிகளைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றது. பண்டைத் தமிழர்களின் தொன்மையான வழிபாடு ‘அணங்கு’ ஆகும். அகப்பாடல்களில் ‘அணங்கு’ பற்றிய வழிபாடுகளை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியல், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், சடங்குகள், சமூக அமைப்பு ஆகியவற்றைப் பதிவு செய்துள்ள முக்கியப் பண்பாட்டு ஆவணங்களாகத் திகழ்கின்றது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய பதினெண் மேற்கணக்கு நூல்களில் இயற்கையோடு இணைந்த தெய்வ நம்பிக்கைகளும், அச்சம், வியப்பு, பாதுகாப்பு, வளம் ஆகிய மனநிலைகளிலிருந்து தோன்றிய வழிபாட்டு மரபுகளும் பல்வேறு நிலைகளில் வெளிப்படுகின்றன. இவ்வகையில் ‘அணங்கு’ என்பது சங்க காலத் தமிழரின் சமயச் சிந்தனையையும், இயற்கை சார்ந்த நம்பிக்கைகளையும் புரிந்து கொள்வதற்குரிய முக்கியமான கருத்தாக்கமாக அமைந்திடுகின்றது. ‘அணங்கு’ என்பது ஒரு பெண் தெய்வத்தைக்

குறிக்கும் சொல்லாக மட்டுமின்றி குறிப்பிட்ட இடம், இயற்கைச் சூழல், அச்சமூட்டும் ஆற்றல், காவல் மற்றும் வளம் ஆகியவற்றோடு தொடர்புடையது என்ற பொருண்மையிலும், சங்கப் பாடல்களில் பயன்படுத்தப்படுகின்றது. **‘எட்டுத்தொகை அகப்பாடல்களில் அணங்கு’** வழிபாடு முறைகள் குறித்து இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

அணங்கு விளக்கமும் - வரையறைகளும்

சங்கப் பண்பாட்டில் காணப்பெறும் இரண்டு ஆவி வழிபாடுகளாக அணங்கும், சூரும் அமைகின்றன. ‘இது அச்சம் கொள்ளத்தக்க, வருத்தம் உண்டாக்குகிற ஒரு துடியான தெய்வமாகும். மக்களைத் தீண்டி வருத்தும் இயல்புடைய அணங்கினைத் ‘தாக்கு அணங்கு’[2] என பக்தவத்சல பாரதி குறிப்பிடுகின்றார்.

அணங்கு என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி வருத்தம், நோய், அச்சம், கொலை, தெய்வம், தெய்வ மகள், வருத்திக்கொள்ளும் தெய்வமகள், தெய்வத்திற்கு ஒப்பான **மாதர், பேய், அழகு, வடிவு, குட்டி**[3] ஆகிய பொருள்களைக் கூறுகின்றது. ‘அணங்கு’ என்பதற்கு வருத்தம், தெய்வம் என்ற பொருளிலே மிகுதியாக வந்துள்ள காரணத்தாலும், இது உயிருள்ள அல்லது உயிரற்ற பொருள்களில் உறையும் தன்மையுடையது என்ற காரணத்தாலும் இதனை வீற்றுத் தெய்வம் என்று உரையாசிரியர் சுட்டுவது பொருத்தமாகும்.[4] இவ்வாறு ஆற்றல், வழிபாடு ஆகியவை பண்டைய இலக்கியக் கூறுகளில் ஒன்றான அணங்கு குறித்த நம்பிக்கையோடு தொடர்புடையதாகின்றது.

வீற்றுத் தெய்வ வழிபாடு

வீற்றுத் தெய்வமாகிய அணங்கின் தன்மையாக உ. வே. சா அவர்கள், **“காம நெறியாள் உயிர் கொள்ளுந் தெய்வமகள்”**[5] எனச் சுட்டிக்காட்டுவது ஒப்பு நோக்கத்தக்கது. அணங்கு என்பது அபாயத்தை விளைவிக்கக் கூடிய புனிதச் சக்தி என்றும் பொருட்களிலோ அல்லது மனிதனிடத்திலோ தங்கக் கூடியதென்றும் சுட்டுகின்றார். மேற்சுட்டியவைகளில் இருந்து அணங்கு உறைவதற்கு இடம் தேவைப்படுவது உணர்த்தப்படுகின்றது.

அணங்கு - சடங்கு நிலை

அணங்கு என்னும் சக்திக்குப் படையலிட்டு அச்சக்தியினை அமைதிப்படுத்த முயன்ற செய்தியினை நற்றிணை எடுத்துரைக்கின்றது.

“அமர்க் கண் ஆமான் அருநிறம் முள்காது

பணைத்த பகழிப் போக்கு நினைந்து, கானவன்,

‘அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க’ எனக்

கடவுள் ஓங்கு வரை பேண்மார் வேட்டு எழுந்து

கிளையொடு மகிழும் குன்ற நாடன்”[6](நற். 165 : 1-5)

என்ற பாடல் அடிகளின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. இப்பாடலில் வேட்டையில் குறி தவறியமைக்கு மலையில் உறையும் தெய்வமே காரணம் என அறிந்து சுற்றத்தோடு அணங்கிற்குப் பலியிட்டு வழிபாடாற்றிய செய்தி வெளிப்படுகின்றது. வெறியாட்டில் வேலன் பூசாரி 'முருகு' என்னும் அணங்கிற்கு ஆட்டின் கழுத்தையறுத்துத் தினையைப் பரப்பி வைத்து வழிபட்டான் என்பதனைப் பின்வரும் பாடல் எடுத்துரைக்கின்றது.

"மறிக்குர லறுத்த தினைப் பரப் பிரீஇ"[7](குறுந். 263)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

பலவாகிய வேறுபட்ட நிறம் பொருந்திய சோற்றுடன் பலியிட்ட சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று, அதன் குருதியைக் காதல் நோய் உடைய பெண்ணின் நறிய நெற்றியில் தடவுவார். முருகு எனும் அணங்கிற்கு பலி கொடுத்த செய்தியினை பின்வரும் குறுந்தொகைப் பாடலடிகளும் எடுத்துரைக்கின்றது.

"பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு

சிறுமறி கொன்று இவள் நறுநுதல் நீவி

வணங்கினை கொடுத்தி யாயின், அணங்கிய"[8](குறுந். 362)

என்ற பாடல் அடிகள் முருகு அணங்கு தாக்கிய தலைவிக்கு மறி அறுத்து குருதி பொட்டு இட்டு அதன் நோயைக் குணப்படுத்துவதாக சித்திரிக்கப்படுகிறது.

முலை உறை வீற்றுத் தெய்வம்

மகளிர் முலையிடையே வாழ்கின்ற அணங்கு வீற்றுத் தெய்வம் என்று குறிக்கப்படுகின்றது.

"சுணங்கு சூழ் ஆகத்து அணங்கு என வருத்த

நல்வரல் இளமுலை"[9](அகம். 161: 12-13)

"பொரிப் பூம் புன்கின் அழற் தகை ஒண்முறி

சுணங்கு அணி வன முலை அணங்கு கொளத் திமிரி"[10](நற். 9-5)

என்ற பாடல்களின் வழி அணங்கு நிரம்பிய அழகிய முலையில் கண்டாரை வருத்தும் தன்மையுடன் அணங்கு வீற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது. மேலும், தலைவன் தலைவியின் முலையில் இருக்கும் அணங்கினைத் தாக்குகின்ற அணங்காகக் கருதி வருத்தம் இழைப்பதாக மருகி நிற்கின்றான்.

"நின் முலைய

அணங்கு என நினைதி நீயே

அணங்கு என நினையும், என் அணங்குறு நெஞ்சே"[11](ஐங்குறு - 363)

என்ற ஐங்குறுநூற்று பாடல் தாக்கணங்கு குறித்து சித்திரிக்கின்றது.

ஆயுதங்களில் அமர்ந்துறையும் அணங்கு

வீரர்கள் கைக்கொண்டிருக்கும் ஆயுதங்களிலுல் அணங்கு அமர்ந்து அவர்களுடைய தொழில்களில் வெற்றி நல்கின்றது.

"அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த

உரவு வில் மேல் அசைத்த கையை"[12](கலி. 50 : 6-7)

என வருவது விற்படையில் சேர்ந்துறையும் அணங்கைக் குறிப்பிடுகின்றது. இதன் மூலம் கூர்மையாக வருத்தம் இழைத்திடும் ஆயுதங்களில் அணங்கு உறைந்திடுவதாக சங்க அகப்பாடல்களில் தெரிவிக்கப்படுகின்றது.

அணங்கு உறையும் இடங்கள்

புறக்கண்ணிற் புலனாகாத அணங்குகள் உறையுமிடங்களாகவும் சங்க இலக்கியங்கள் சிலவற்றைச் சுட்டுகின்றன. அந்த இடங்கள் பெரும்பாலும் அச்சவுணர்வும் வளப்பத்தன்மையும் ஒருங்கே அமைந்தவையாக உள்ளது. அணங்கு உறையும் இடங்களாக மலைகள், நீர்த் துறைகள், மரங்கள் என சங்க அகப்பாடல்களில் பதிவாகி உள்ளன.

தலைவன் தீண்டி வருத்தும் அணங்கு வீற்றிருக்கும் நெடிய மலையில் உள்ள ஊரினைச் சேர்ந்தவன் என தலைவி கூறுகின்றாள்.

"அணங்குடை நெடுவரை உச்சியின்"[13](அகம். 22)

என்ற பாடல் அடிகள் வழி அறியலாகின்றது.

இரவுக்குறியில் தலைவன் வருகையின்போது எதிர்படும் ஏதங்களில் வருத்திடும் அணங்கும் இடம் பெறுகின்றது.

"அடுக்கம் போழ்ந்து

அணங்குஉடை ஆரிடை, ஈங்கு நீ வருவதை"[14](கலி. 49)

என்ற கலித்தொகை பாடல் எடுத்துரைக்கின்றது.

"பணைத்த பகழிப் போக்கு நினைந்து, கானவன்

அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க"[15](நற். 165)

என்ற பாடல் அடி வழியே அம்பு பிழைத்தலால் வரையகத்து அணங்குக் கடவுளின் சீற்றம் தணிய குருதி பலி கொடுத்து உண்ண வைப்பதாக எடுத்துரைக்கப்படுகிறது.

நீர்த்துறை **அணங்கு**

தலைவன் அகன்ற நீர்த்துறையில் உறையும் அணங்கினை முன்பாக நிறுத்தி விரைந்து மணம் முடிப்பதாகக் கையைப் பற்றிச் சூள்மொழி உரைக்கின்றான்.

"எக்கர் நண்ணிய எம் மூர் வியன்துறை

நேர் இறை முன்கை பற்றி

சூரர மகளிரோடு உற்ற சூளே"[16](குறுந். 53)

என்ற பாடலடிகள் தன்னை திருமணம் செய்து கொள்ள தலைவன் தாமதம் செய்வதால் சூள் உரைத்த தலைவனையும், சூள் கேட்ட தன்னையும் அணங்கு வருத்திடும் என தலைவி அஞ்சுவதாக குறுந்தொகை பாடல் தெரிவிக்கின்றது. சூள் பொய்த்தல் வருத்தம் செய்திடும் அணங்காக கூறப்படுகிறது.

தெய்வங்கள் உறையும் நீர்த்துறைக் கண் தலைவி நீராடியதால் அவை தீண்டி, தலைவி மெலிந்து போய் விட்டதாகத் தலைவன் தன் பரத்தையர் ஒழுக்கப் பிரிவை மறைத்துக் கூறும் போது அணங்கு பற்றிய பதிவு தெரிவிக்கப்படுகின்றது.

"துறை எவன் அணங்கும், யான் உற்ற நோயே"[17](ஐங்குறு. 53)

என்று நீர்த்துறை அணங்கின் தீண்டுதல் செயல் எடுத்துரைக்கப்படுகின்றது.

உயிரினங்களில் அணங்கு

வாழைக் குருத்துகளை மிகுதியாக உண்டதால் நிலைகெட்டு ஓடிடும் யானையின் தந்தங்களும் அணங்கு உறைதலைக் குறுந்தொகைப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

"அணங்குடை அருந்தலை நீவலின், மதன் அழிந்து"[18](குறுந். 308)

என்றுரைக்கின்றன. பாம்பின் வெப்ப விஷத்தில் அணங்குறைதலை நற்றிணைப் பாடல்,

"அணங்குடை அரவின் ஆர் இருள் நடு நாள்" (நற். 168)

என்று பாம்பின் நச்சுப்பையில் அணங்கு உறைவதாகவும் கூறப்படுகின்றது.

பேய்களில் அணங்கு

பேய்களில் அணங்கு உறைவது கீழ்கண்டவாறு நற்றிணையில் தெரிவிக்கப்படுகின்றது.

"பேஎய் மல்லல் மூதூர் மலர்ப் பலி உணீஇய" (நற். 73)

என்ற பாடலடிகளின் மூலம் ஊன் பலிச் சோற்றை உண்ண எழுந்திடும் அணங்கு இறங்கிய பேய் மூதூர் மன்றத்தில் உறைவதாகக் கூறப்படுகின்றது.

பெண் உடம்பில் அணங்கு

பூப்பு எய்திய பெண் தனியாக நீர்த்துறை பக்கம் சென்றால் அணங்கு உடம்பில் தாக்கி நோயினைத் தந்திடும், அதனால் தலைவி மனையை விட்டுச் செல்லாதவாறு தாயினால் எச்சரிக்கப்படுகின்றாள்.

"முலை முகம் செய்தன : முள் எயிறு இலங்கின

……..

……..அணங்கு உடைய

காப்பும் பூண்டிசின் ……"[19](அகம் - 7)

என்று பருவமடைந்த பெண்கள் அணங்கு உறையும் இடங்களுக்குச் சென்றால் அணங்கு அப்பெண்ணைத் தாக்கி வருத்தும் என அகநானூறு சுட்டுகின்றது.

மேலும்,

“பெரும் பெயர் கூடல் அன்ன நின்

கரும்புடைத் தோளும் உடைய வால் அணங்கே”[20](நற். 39)

கரும்புடைத் தலைவியின் தோளில் அணங்கு உறைவதாகக் கூறப்படுகின்றது.

கொடி போன்ற மின்னல் இடையினை உடைய அணங்காக தலைவி திகழ்வதால் தலைவன் அவளைக் கண்டு வியப்புறும் நிகழ்வினை

“கொடி என, மின் என அணங்கு என யாதொன்றும்”[21](கலி. 57)

என்ற பாடல்களின் வழி தலைவி அணங்காகத் தெரிவிக்கப்படுகின்றாள்.

தொகுப்புரை

எட்டுத்தொகை அகப்பாடல்களில் இடம் பெறும் அணங்கு வழிபாடு குறித்த இவ்வாய்வு, சங்க காலத் தமிழரின் சமய நம்பிக்கைகள், இயற்கை உணர்வு, வாழ்வியல் மரபுகள் ஆகியவை ஒன்றோடொன்று பிணைந்திருக்கும் தன்மையினை வெளிப்படுத்துகின்றது. அணங்கு வழிபாட்டில் பெண்களின் ஆற்றல் முதன்மைப் படுத்தப்படுகின்றது. அணங்கு உறையப் பெற்றவர்களாக பெண்கள் கருதப்பட்டனர். மலைகள், நீர்த்துறைகள், ஆயுதங்கள் போன்றவை அணங்கு உறையும் இடங்களாகக் கருதப்படுகின்றது. உயிரினங்களிலும், அணங்கு உறைந்திடுகின்றன. எனவே, அணங்கு வழிபாடு என்பது தொல் தமிழர்களின் பழமையான ஆவி வழிபாடாகும். சங்க இலக்கியத்தில் புறநிலைச் செய்தியாக அல்லாமல், அகத்திணை வாழ்வியலோடு இணைந்த இயற்கை ஆவி வழிபாடே அணங்கு வழிபாடாகும். அணங்கு பெரும்பாலும் வருத்தம் அளித்திடும் நோக்கிலே சங்க அகப்பாடல்களில் பதிவுகள் அமைந்துள்ளன.

அடிக்குறிப்பு

1. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், ப. 130
2. பக்தவத்சல பாரதி, பண்டைத் தமிழ்ப் பண்பாடு, ப. 491
3. பக்தவத்சல பாரதி, பண்டைத் தமிழ்ப் பண்பாடு, ப. 500
4. பக்தவத்சல பாரதி, பண்டைத் தமிழ்ப் பண்பாடு, ப. 503
5. பின்னத்தூர் உரை, நற்றிணை நானூறு மூலமும் உரையும், ப. 15
6. ரவிச்சந்திரன், சங்க இலக்கியம் நற்றிணை மூலமும் உரையும், ப. 305
7. தமிழண்ணல், சங்க இலக்கியம் குறுந்தொகை மூலமும் உரையும், ப. 313
8. தமிழண்ணல், சங்க இலக்கியம் குறுந்தொகை மூலமும் உரையும், ப. 424
9. நா. மீனவன், சங்க இலக்கியம் அகநானூறு (மணிமிடைபவளம்) மூலமும் உரையும் ப. 92
10. ரவிச்சந்திரன், சங்க இலக்கியம் நற்றிணை மூலமும் உரையும் ப. 24

11. சிங்கார வடிவேலன், சங்க இலக்கியம் ஐங்குறுநூறு மூலமும் உரையும், ப. 412
12. சுப. அண்ணாமலை, சங்க இலக்கியம் கலித்தொகை மூலமும் உரையும், ப. 185
13. நா. மீனவன் சங்க இலக்கியம் அகநானூறு (களிற்றி யானை நிரை) ப. 52
14. சுப. அண்ணாமலை, சங்க இலக்கியம் கலித்தொகை மூலமும் உரையும் ப. 182
15. ரவிச்சந்திரன், சங்க இலக்கியம் நற்றிணை மூலமும் உரையும், ப. 305
16. தமிழண்ணல், சங்க இலக்கியம் குறுந்தொகை மூலமும் உரையும், ப. 86
17. சிங்கார வடிவேலன், சங்க இலக்கியம் ஐங்குறுநூறு மூலமும் உரையும், ப. 78
18. தமிழண்ணல், சங்க இலக்கியம் குறுந்தொகை மூலமும் உரையும், ப. 366
19. நா. மீனவன் அகநானூறு மூலமும் உரையும், (கனிற்றி யானை நிரை), ப. 19
20. ரவிச்சந்திரன், நற்றிணை மூலமும் உரையும், ப. 80
21. சுப. அண்ணாமலை, சங்க இலக்கியம் கலித்தொகை மூலமும் உரையும், ப. 209

துணை நூற்பட்டியல்

References

தொல்காப்பியர், தொல்காப்பியம் (முழுவதும்), பாரி நிலையம், சென்னை, பதிப்பு - 2012.

முனைவர் அ. மா. பரிமணம், முனைவர் கு. வெ. பாலசுப்ரமணியன் (பதிப்பாசிரியர்கள்), குறுந்தொகை, NCBH, சென்னை, பதிப்பு - 2004.

பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், பதிப்பு - 2016.

பக்தவத்சல பாரதி, பண்டைத் தமிழ்ப் பண்பாடு அடையாளம், திருச்சி, பதிப்பு - 2020.

முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை, (பதிப்பாசிரியர்கள்) சங்க இலக்கியம் கலித்தொகை மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2022

முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை, (பதிப்பாசிரியர்கள்) சங்க இலக்கியம் ஐங்குறுநூறு மூலமும் உரையும், சென்னை, பதிப்பு - 2022.

ரவிச்சந்திரன் சங்க இலக்கியம் நற்றிணை மூலமும் உரையும், சென்னை, பதிப்பு - 2022.

முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை (பதிப்பாசிரியர்கள்) சங்க இலக்கியம் அகநானூறு-3 தொகுதிகள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2022.

முனைவர் மு. அருணாசலம் சங்க இலக்கிய ஒப்பாய்வுகள், பரிசல், சென்னை, பதிப்பு - 2024.